**தலைப்பு 221 - தொழில் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 221 - தொழில் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியல்லாத சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ள 05 உருப்படிகளின் திறைசேரி அச்சீட்டு குறிப்புகளில் ஆரம்ப மீதியானது 2021 திடிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரி அச்சீட்டு பதிவுகளுடன் ஒப்பிடும் போது ரூபா 18,643,128 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2022 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரி அச்சீட்டு பதிவகளில் நிலவும் இறுதி மீதிளை 2022 திசெம்பர் மாத திறைசேரி அச்சீட்டு பதிவுகளின் ஆரம்ப மீதிகளுடன் வேறுபாடுகளை இனங்காணக்கூடியதாக காணப்பட்டது. அந்த குறைபாடுகள் தொடர்பில் அரச கணக்குகள் திணைக்களத்தில் விசாரணை மேற்கொள்ளும் போது திறைசேரி அச்சீட்டு பதிவுகளின் வேறுபாடு இடம்பெற்றுள்ளமையை இனங்காணக்கூடியதாக இருந்தது. அதனை பரிசோதனை செய்த பின்னர் எதிர்காலத்தில் திறைசேரி அச்சீட்டு பதிவுகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள நிலுவைகள் சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### (ஆ) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதிய திறைசேரியின் அச்சீட்டு குறிப்புகளின் (SA-92) பிரகாரம் பொறுப்புகளின் மீதி ரூபா 18,811,256 ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளபடியாக பொறுப்புகள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த பொறுப்புகள் மீதி ரூபா 23,180,626 ஆகும். | தொழில் திணைக்களம் மொத்தம் 101 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்தத் துறைகள் அனைத்திலிருந்தும் பொறுப்புகளைக் கண்டறிந்து அறிக்கையிடுவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் எழுந்துள்ளன. இருப்பினும், சரியான பொறுப்புகளைக் கண்டறிந்து அறிக்கையிட அனைத்துத் தரப்பினருக்கும் தெரிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | அனைத்து பொறுப்புகளும் சரியாக அடையாளம் காணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மூலதன செலவின விடயங்களிடையே ரூபா 36,952,781 ஆன நிதியேற்பாட்டினை மாற்றும் போது நிதிப்பிரமாணம் 66(4)(அ) பிரிவின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏனைய செலவின விடயங்களுக்கு நிதியேற்பாடுகளை மாற்றுதல் இடம்பெற்றிராததுடன், ஊ.ந. நிதியத்திற்கு உரியதாக தயாரிக்கப்படும் இறுதிக் கணக்கை தயாரிக்கும் போது பெறுமானத் தேய்விடும் தேவைப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் மேற்படி செலவின விடயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உரிய நிலையான சொத்துத் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொகுதியின் கீழ் இனங்காணல் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. | |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய அரச வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் 03 (xvii) இன் பிரகாரம் நிதியேற்பாடுகளிலான சேமிப்புகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டுக்காக 03 மூலதன செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் ஏனைய செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு நிதியேற்பாடு மாற்றப்பட்ட செலவின விடயங்களுக்காக ரூபா 5,579,872 ஆன நிதியேற்பாடு மேற்படி சுற்றறிக்கையை வெளியிட்ட பின்னர் செலவிடப்பட்டிருந்தது. | 03/2022 ஆம் இலக்க அரச வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை மீறப்படும் வகையில் செயற்பட்டிருக்கவில்லை. | வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புகள்<br>பெறுமதி | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் | | | | |
| (i) | 34(6) ஆம் பிரிவு | - | ஒரு நீராவி கொதிகலன் ஒவ்வொரு 14 மாதங்களுக்கும் கீழ் பணிபுரியும் பணியாளர்களால் பரிசோதிக்கப்பட வேண்டும், | அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் சமர்ப்பித்த அறிக்கைகளின் நகல்களை தொழிற்சாலை | கொதிகலன் ஆய்வுகள் சட்டத்தின்படி முறையாக செய்யப்பட வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மேலும் பெரிய பழுதுபார்ப்புகளுக்குப் பிறகு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆய்வு செய்து சோதிக்கப்பட வேண்டும். திணைக்களத்தின் தொழிற்சாலை ஆய்வுப் பொறியாளர் அலுவலகம் ஒவ்வொரு கொதிகலன் தொடர்பிலும் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதற்கான பொருத்தமான வேலைத்திட்டத்தை உருவாக்கியிருக்கவில்லை. | உரிமையாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் மாவட்ட தொழிற்சாலை ஆய்வு பொறியாளர் அலுவலகங்களில் சமர்ப்பித்து அதன்படி திணைக்ளத்தின் புள்ளி விவரங்கள் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றன. | |
| (ii) | 92 ஆம் பிரிவு | - | தொழிற்சாலையில் ஏற்படும் விபத்துகள் மற்றும் தொழில் சார் நோய்கள் தொடர்பான விவரங்களை பொதுப் பதிவேட்டில் குறிப்பிட்டு அதன் நகல்களை மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும் என்றாலும், தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகத்தில் அந்தத் தகவல்களைப் பெறும் நடைமுறையொன்று காணப்படவீல்லை. | திணைக்கத்தின் உத்தேச டிஜிட்டல்மயப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம், இந்த பணிகளை மேலும் முறைமைப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது. | தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகள் மற்றும் தொழிற்சாலை நோய்கள் பற்றிய முறையான பதிவுகளை பராமரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில் ஆணையாளர் நாயகத்தின் 1999 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க சுற்றறிக்கை 1.1, 1.1(3), 5.2 ஆம் பந்திகள் | - | ஊழியர் நலன்புரி நிதியத்தின் நிலுவைப் பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணத்தை அறவிடும் போது ஆரம்ப பரிசோதனைச் சந்தர்ப்பத்தில் சரியான தகவல்களை சேகரித்தல், ஊழியர்களின் வெளிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளல், முறையான விசாரணை அறிக்கைகளை பேணிச் செல்லல், மிகைக் கட்டணத்தை சரரியாக கணிப்பிடல், ஊ.ந.நி./ச.ந./05 | தொழில் திணைக்களத்தின் 57 மாவட்ட தொழிலாளர் அலுவலகங்கள் மற்றும் உப தொழிலாளர் அலுவலகங்கள் சுற்றறிக்கையின்படி செயல்படவில்லை என்ற உண்மைகள் எதுவும் முன்வைக்கப்படாததால், அவை ஒப்புக்கொள்கிறதா | நிலுவைத் தொகை மற்றும் மிகைக் கட்டணத்தை பற்றிய வழக்கமான மற்றும் துல்லியமான தகவல்களை பராமரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஆம் இலக்க பதிவேட்டினை பராமரித்தல் சுற்றறிக்கையின் பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை. | இல்லையா என்பது குறித்து என்னால் கருத்து தெரிவிக்க முடியாது என்பதை தாழ்மையுடன் குறிப்பிட விரும்புகிறேன். | |
| (இ) | 2019 செப்தம்பர் 27 ஆந் திகதி 2142/90 ஆம் இலக்க வர்த்தமானி | - | i | வர்த்தமானியின் ஏற்பாடுகளுக்கமைய வர்த்தமானி அறிவித்தலின் விதிகளின்படி, நீராவி கொதிகலன்கள் மற்றும் பிற அழுத்தமான பாத்திரங்களை பரிசோதிக்கும் ஏற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டிய போதிலும், தொழிற்சாலைப் பரிசோதனையின் போது ஏனைய அழுத்தம் மிக்க கொள்கலன்களை பரிசோதிக்கும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவீல்லை. | இந்த விதிமுறைகள் மூலம் ஏனைய அழுத்தம் மிக்க கொள்கலன்களை பரிசோதிப்பதற்காக ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் உத்தரவுகளை பின்பற்ற வேண்டும். |
| | | | ii. | அதிக இரைச்சலில் இருந்து தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் உள்ளன என்பதையும், தொழிற்சாலையில் போதுமான வெளிச்சம் உள்ளது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றாலும், தொழிற்சாலை ஆய்வில் பயன்படுத்தப்பட்ட கண்காணிப்பு பட்டியல்கள் அந்த பரிசோதனையை பதிவு செய்யத் தேவையான புதிய வர்த்தமானியின் கட்டளைகளுக்கமைய நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒளி மற்றும் ஒலி போன்ற சுற்றுச்சூழல் தரவுகள் திணைக்களத்தின் தொழில்சார் பாதுகாப்புப் பிரிவின் ஆய்வாளர்களால் அளவிடப்படுகிறது மற்றும் திணைக்களத்தின் அளவீட்டிற்கான உபகரணங்கள் மற்றும் மனித வளங்களின் இருப்பைப் பொறுத்து, தேவையான போது தொழில்சார் பாதுகாப்புப் பிரிவிலிருந்து பொருத்தமான பரிந்துரைகள் பெறப்படுகின்றன. | வர்த்தமானி அறிவித்தலின் கட்டளைகளை பின்பற்ற வேண்டும். |

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான இர்த்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் பழுதுபார்த்தல் பணிகளை துரிதமாக நிறைவேற்றும் நோக்கில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பெறுகை நடைமுறைகளை பின்பற்றாது ரூபா 11,177,000 தொகையான பெறுகைகள் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. கட்டிடங்கள் திணைக்களத்தினால் இந்த ஒப்பந்தம் ரூபா 9,590,303 ஆன பெறுமதிக்கு தனியார் ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு உப ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டு பெறுமதியினுள்ளான முகாமைத்துவக் கட்டணம் ரூபா 449,960 ஆக காணப்பட்ட போதிலும், கட்டிட பழுதுபார்த்தல் பணிகள் உரிய முறையில் கண்காணிக்கப்பட்டிராததுடன், அவ்வப்போது சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் ஒப்பந்தததாரரால் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்குரிய மொத்த மதிப்பீடு தொகை கட்டிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டாலும், கட்டுமானப் பணிகள் முடிந்த பின், மீதமுள்ள நிதியை மீண்டும் தொழில் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கட்டடம் பழுதுபார்க்கும் பணியில் முடிக்கப்படாத பாகங்கள் இருந்தால், அந்த பகுதிகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் செய்து கொடுக்கவும், இல்லையெனில், பழுதுபார்த்தலுக்குரிய பிடிகாசினைப் பயன்படுத்தி அந்த பணிகளை நிறைவேற்ற அல்லாதுவிடின் அந்த பழுதுபார்த்தலுக்குரிய பிடிகாசினைப் பயன்படுத்தி அந்த பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பிடிகாசு போதவில்லை எனின், குறித்த ஒப்பந்தக் கம்பனியின் இறுதித் தொகையை செலுத்தும் போது அது தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்ற வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படும் 02 பொது வைப்புக் கணக்குகளின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதிகளின் கூட்டுத்தொகையானது ரூபா 767,737,985 ஆக காணப்பட்டதுடன், அந்த மீதியில் ரூபா 175,653,978 தொகையான இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 (2) மற்றும் (3) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதியில் 2023 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த கணக்குகளின் மீதிகள் முறையே ரூபா 131,794,490 மற்றும் ரூபா 547,358,262 ஆகும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது தொழில் திணைக்களம் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களில் ஊழியர் நலன்புரிய நிதியத்திற்கு உரியதாக ரூபா 282,726,669 ஆன தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் போது தொழில் திணைக்களத்தின் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களில் ஊழியர் நலன்புரிய நிதியப் பிரிவுகளுக்கு உரியதாக இதுவரையிலும் (2023 ஏப்ரல் 30) ரூபா 199,233,655.63 ஆன கூட்டுத்தொகை நிலவியது. | பங்களிப்பு பணத்தை தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழிற்சாலை உரிமையாளர் அல்லது பதிவாளராவதற்கு 2019 செப்தம்பர் 27 ஆந் | பொறியாளர்கள் எண்ணிக்கை போதுமானதாக | வர்த்தமானியின் விதிகளின்படி தொழிற்சாலைகளின் |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய 2142/90 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஏற்பாடுகளுக்கமைய பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மாவட்ட தொழிற்சாலைகள் பொறியியலாளர் அலுவலகத்தினுள் பேணிச் செல்லப்பட்ட 32,948 கோவைகளில் புதிய சட்டத்திற்கமைய பதிவு செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 3,153 ஆகும். ஆகக் குறைந்த பதிவுக் கட்டணமான ரூபா 1,000 இனை கருத்திற்கொள்ளும் போது பதிவு செய்யப்படாத தொழிற்சாலைகளுக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய பதிவுக் கட்டணம் ஆகக் குறைந்தது ரூபா 29,795,000 திணைக்களத்திற்கு இழப்பாகியிருந்தது. | இல்லாததால், தொழிற்சாலைகளுக்குச் சென்று பதிவு செய்வது மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், கடந்த ஆண்டுகளில் எதிர்கொண்ட கோவிட் தொற்றுநோய், பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் எரிபொருள் நெருக்கடி போன்ற பிரச்சனைகளும் இதில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனினும், இந்த நடவடிக்கைகளை அதிகரிக்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. | பதிவு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் வழக்கு தொடருவதற்கு 2010 – 2018 காலப்பகுதியினுள் 52 கோவைகள் கிடைத்திருந்த போதிலும், அவற்றுள் 11 கோவைகள் தொடர்பில் மாத்திரமே வழக்கு தொடரப்பட்டிருந்தது. குருநாகல் மாவட்டத்தின் 09 சம்பவங்கள் தொடர்பில் வழக்கு தொடர்வதற்க தொழிற்சாலைகள் பாதுகாப்பு பிரிவில் அங்கீகாரம் வழங்கப்பட்டு 05 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரை கடந்திருந்த போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த வருடங்களில் நிலவிய கோவிட் தொற்றுநோய், பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நிதியேற்பாடு மட்டுப்படுத்தப்படல், அலுவலகம் மற்றும் நீதிமன்றப் பணிகளைத் தொடராதது போன்ற காரணங்களால் வழக்குகள் மற்றும் அலுவலகப் பணிகள் இயல்பு நிலைக்குத் திரும்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. குறைந்தபட்ச நிதியேற்பாட்டினுள் திட்டமிட்ட முறையில் வேலை செய்வதன் மூலம் வழக்குகளை விரைவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(இ) <u>தனியார் நலன்புரி நிதியங்களின் கண்காணிப்பு</u>

| | | | |
|---|---|---|---|
| (i) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத தனியார் ஊழியர் சேம நிதியங்களின் நிர்வாகம் தொடர்பில் தேவையான சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், முறையான நிர்வாகம் மற்றும் கண்காணிப்பிற்காக தொழில் திணைக்களம் தனியார் நலன்புரி நிதியப் பிரிவொன்றினை நிறுவியிருந்தது. திணைக்களத்தின் பதிவு செய்த தனியார் ஊழியர் நலன்புரி நிதியங்கள் (PPF) 117 இல் 87 இன் மீதிகள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. நிதியங்களின் மீதிகளை சமர்ப்பிக்காத நிறுவனங்களின் தகவல்கள் பேணிச் செல்லப்பட்டிராததுடன், இந்த நிதியங்கள் தொடர்பில் முறையான கண்காணிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத தனியார் ஊழியர் சேம நிதியங்களின் செயற்பாட்டிலுள்ள 117 நிறுவனங்களிடையே தற்போது மீதிகளை சமர்ப்பிக்காத நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை செய்யும் நடவடிக்கைகள், நிலவும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கைகள் ஆகிய விடயங்களின் அடிப்படையில் இடம்பெற்றவாறு உள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள், இந்த விடயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை முன்வைக்க எதிர்பார்க்கிறேன். மேலும், அந்த நிதியங்களின் நிலுவைகள் தொடர்ந்து மாற்றத்திற்கு உள்ளாகின்றமையை குறிப்பிட விரும்புகிறேன். | தனியார் ஊழியர் சேம நிதியங்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | இந்த நிதியங்கள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் 291 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், இவற்றுள் 68 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில், தனியார் ஊழியர் சேம நிதியப் பிரிவில் ஒரு நிர்வாக சேவையில் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரம் சேவையாற்றியதுடன், அதற்கமைய பல கடமைகள் காரணமாக, மனு பதிவேட்டை புதுப்பிப்பதில் குறைபாடுகள் | முறைப்பாடுகள் முறையாக விசாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இருந்தன. எவ்வாறான போதிலும், அந்த முறைப்பாடுகளின் விசாரணை நடவடிக்கைகள் பல்வேறு விசாரணை கட்டங்களின் கீழ் செயற்பாட்டில் உள்ளது என்பதை மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (iii) | அதிகாரச்சட்டத்தின் 27(2)(அ) பிரிவின் பிரகாரம், ஏதேனும் மாதமொன்றின் பங்களிப்பு பணம் அதற்கடுத்த மாதத்தின் இறுதித் திகதியில் செலுத்தப்பட வேண்டிய போதிலும், கம்பனியொன்றினால் பேணிச் செல்லப்படும் தனியார் ஊழியர் நலன்புரி நிதியத்திற்காக முறையான பங்களிப்பு பணம் செலவு வைக்கப்படாத காரணத்தால் 2019-2021 காலத்திற்கு உரியதாக ரூபா 108,218,673 மிகைக் கட்டணம் செலுத்தல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. | உரிய தேதியில் நன்கொடை செலுத்தாத குறித்த கம்பனி மற்றும் பிற கம்பனிகள் குறித்து குழு விசாரணை நடத்தப்பட்டு, நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் மிகைக் கட்டணங்களை கணக்கிட்டு வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்புடன் குறிப்பிட விரும்புகிறேன். | சட்டத்தின் விதிகளின்படி உடனடியாக பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | <u>தொழில்சார் சங்கங்களின் பிரிவு</u> | | |
| | 1935 இன் 14 ஆம் இலக்க தொழிற்சங்க கட்டளைகள் சட்டம், 1946 இன் 03 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம், 1948 இன் 15 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம், 1958 இன் 18 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம், 1970 இன் 24 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம் ஆகிய கட்டளைச் சட்டங்களின் மூலம் தொழிற்சங்கங்களை பதிவு செய்தல், நிர்வகித்தல் மற்றும் செயற்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய இடம்பெறுவதுடன், இந்த கட்டளைச் சட்டங்கள் இற்றைக்கு பொருந்தும் வகையில் திருத்தப்படவில்லை என்பது பரிசோதனைகளில் | நீங்கள் அவதானித்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாகவும், 2019 ஆம் ஆண்டு முதல் தொழிற்சங்க கட்டளைச் சட்டம் தொடர்பான திருத்தங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டு, அது தொடர்பான திருத்தங்கள் தொடர்பான அறிக்கைகள் உரிய அதிகாரிகளிடம் முறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | கட்டளைகள் சட்டத்தின் படி நோக்காக கொள்ளப்பட்ட பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் இனங்காணப்பட்ட சில பிரிவுகளை திருத்தியமைப்பதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் கலந்துரையாடப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்படவில்லை.

2289/43 ஆம் இலக்க 2022 யூலை மாதம் 22 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பிரகாரம் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் பணிகள் மற்றும் செயற்பணியாக தொழிற்சங்கங்களை பதிவு செய்தல், அனைத்து அரச மற்றும் தனியார் துறையின் தொழிற்சங்கங்களின் பணிகள் நாட்டின் அபிவிருத்திக்கு ஈடுபடுத்தல் சார்பான படிமுறைகளை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேஹவர பியச கட்டிடத்தில் 4 ஆம் தளத்தின் சிற்றுண்டிச்சாலை மற்றும் 8,9,10,11,12,13 மற்றும் 14 ஆகிய தளங்களின் உள்ளக நிர்மாணங்கள் மற்றும் | 8, 9, 10, 11 மற்றும் 12 தளங்களில் உள்ளக நிர்மாணங்கள் இடம்பெற்றவாறு உள்ளன. 13 மற்றும் 14 வது மாடிகளில் உள்கட்டமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு | உள்ளக நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு இடவசதியை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தடுப்புச் சுவர்களை உருவாக்கும் பணிகளுக்கு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 460,326,053 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அந்த பணிகள் நிறைவடைந்திருக்கவில்லை. | தொழில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அதில் குறைபாடுகள் உள்ளதா என சரிபார்க்கப்பட்டு வருகிறது. 16 வது மாடியின் வலது பக்க உள்ளக கட்டுமான பணிகள் 2023 இல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டின் பிரகாரம், 2022 ஆம் ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் வாகன விபத்துகள் இடம்பெற்றதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. விபத்துகள் தொடர்பான நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கைகள் கணக்காய்வுக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022ஆம் ஆண்டு 02 வாகனங்கள் விபத்தில் சிக்கியதோடு, அந்தச் சேதங்களுக்கான திருத்தப் பணிகள் நிறைவடைந்ததோடு, அதற்கான செலவுகளும் முழுமையான காப்புறுதியின் மூலம் ஈடுசெய்யப்பட்டன. சேதம் தொடர்பாக நிதிப்பிரமாணமம் 104 இன் கீழ் விசாரணைகளை மேற்கொள்வதற்காக தொடர்புடைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, அந்த உத்தியோகத்தர்களால் விசாரணை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உடனடியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகம் அமைந்துள்ள பழைய கட்டிடம் மண்சரிவு காரணமாக ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளமையால் 2015 ஆம் ஆண்டு முதல் அந்த இடத்திலிருந்து நீங்கி மாதமொன்றுக்கு ரூபா 175,000 படியாக வாடகைக் கட்டிடத்தில் நிறுவப்பட்டிருந்தது. வாடகைக் கட்டிடத்தின் உடன்படிக்கைக் காலம் 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி நிறைவடைகின்றமையால், 2021 யூலை 07 ஆந் திகதி கூடிய திணைக்களத்தின் பெறுகைகள் குழு இந்த கட்டிடத்தின் பழுதுபார்த்தல் பணியை ரூபா 11,177,000 ஆன தொகைக்கு கட்டிடங்கள் திணைக்களத்தின் மூலம் நிறைவேற்ற தீர்மானித்திருந்தது. பழுதுபார்த்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் மண்சரிவு ஆபாயம் மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவினால் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் குறுங்கால பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன், பழுதுபார்தலின் | தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள 2023 ஜனவரி 20 திகதியிட்ட கடிதத்தில் 2023 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நிலச்சரிவு அபாயத்தை குறைக்கும் திட்டத்தை செயல்படுத்த நிறுவனம் முன்மொழிகிறது என்றும், பரிந்துரைகளுக்கு உட்பட்டு கட்டிடத்தை பயன்படுத்தலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு, ஊழியர் நலன்புரி நிதியப் பிரிவினால் தரவு அமைப்புகளுக்கான வலையமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வலையமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், இரத்தினபுரி மாவட்ட தொழிலாளர் அலுவலகம் அந்தக் கட்டிடத்தில் நிறுவப்பட உள்ளது. | சொத்துக்கள் செயற்திறனாகவும் திறமையாகவும் நிர்வகிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்னரும் மீண்டும் 2021 மே 17 இற்கு அண்மிய திகதியில் மண்சரிவு இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த பழுதுபார்த்தலை உரிய முறையில் உரிய காலத்தில் மேற்கொண்டு அலுவலக பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் போது முடியாதிருந்ததுடன், 2020 ஒக்தோபர் முதல் 2022 திசெம்பர் மாதம் வரையிலும் மாதமொன்றுக்கு ரூபா 280,000 படியாக குத்தகை வாடகையாக வெளிவாரித் தரப்பினருக்கு ரூபா 7,560,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் தாபிக்கப்பட்டுள்ள மகளிர் விடுதியின் பழுதுபார்த்தல் பணிகளுக்காக 2018 யூன் 15 ஆந் திகதி முதல் மூடப்பட்டிருந்ததுடன், அந்த பழுதுபார்த்தல் பணிகள் 2023 ஆம் ஆண்டு வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. விடுதியை மீள திருத்தியமைப்பதன் மூலம் முதலீட்டு வலயத்தினுள் சேவையாற்றும் மக்களுக்கு தங்குமிட வசதிகளை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளதுடன், இந்த விடுதியின் பாதுகாப்பிற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2018 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் மாதம் வரையிலும் ரூபா 4,245,678 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | விடுதிகளின் பராமரிப்புக்கான ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாததால், அதன் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படாது கொக்கல மற்றும் கட்டுநாயக்க விடுதிகளின் புனரமைப்புக்கான ஒதுக்கீடுகள் ரூபா 4,000,000 தொகையை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. பியகம விடுதி தற்போது மூடப்பட்டுள்ள போதிலும், விடுதி கட்டிடத்தின் பாதுகாப்பிற்காகவும், விடுதிகள் மற்றும் பொறுப்பதிகாரிகளின் பாவனைக்காக வழங்கப்படும் பெறுமதியான பொருட்களின் பாதுகாப்பிற்காகவும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் செயற்திறனாகவும் திறமையாகவும் நிர்வகிக்கப்பட வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும். (அட்டவணை கீழே) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில உள்ளபடியாக திணைக்களத்தில் நிலவும் ஊழியர் பற்றாக்குறைஈ தீர்மானம் எடுத்தல், கண்காணிப்பு, கள கடமைகள் போன்ற பிரிவுகளிலிருந்து எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்துகொள்ள மற்றும் உற்பத்தி திறன் குறைவடைந்தமை தொடர்பில் தாக்கம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | 2023 பெப்ரவரி 07 ஆந் திகதிய அமப/23/0160/605/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த திணைக்கத்திற்க உரிய பதவி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமையதிணைக்கள ரீதியான உதவி தொழில் ஆணையாளர் பதவியில் மற்றும் தொழில் அலுவலர் (மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளன. சாரதிகள் மற்றும் அலுவலக உதவியளார் சேவையின் பதவி வெற்றிடங்களை பல்நோக்க அபிவிருத்தி உதவியாளர்களின் ஊடாக நிரப்புவததற்கு தற்போது நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன. பொறியியல் சேவைக்கு மற்றும் தொழில்நுட்ப சேவைக்கு உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது பொறியியலாளர் (சிவில்) 2 பதவிகளுக்கு 02 உத்தியோகத்தர்களின் | அத்தியாவசியமான பதவிகளுக்கு உரிய பதவியணி வெற்றிடங்களை அங்கீகரிக்கப்பட்ட வாறு நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 211 | 133 | 78 |
| (ii) மூன்றாம் நிலை | 668 | 478 | 190 |
| (iii) இரண்டாம் நிலை | 1,753 | 1,718 | 35 |
| (iv) ஆரம்ப நிலை | 489 | 401 | 88 |
| **மொத்தம்** | **3,121** | **2,730** | **391** |

பெயரிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்காக பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சட்ட உத்தியோகத்தர் பதவியை நிரப்புவதற்கு உரியதாக விண்ணப்பம் கோரும் அறிவிப்பு தயாரிக்கப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. ஏனைய நாடளாவிய மற்றும் ஒருங்கிணைந்த சேவைகளின் பதவிகளின் வெற்றிடங்கள் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், ஒருங்கிணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.